ISSN : 2455 - 0531

# இனம்

இனம் இனத்தைச் சேரும்

Mail Id: inameditor@gmail.com
editor@inamtamil.com

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்

International E-Journal of Tamil Studies

UAN.TN03D0061112

இலக்கணம், இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல், கணினிசார் ஆய்வை இனங்காண!

மலர்:5 இதழ்:18 ஆகஸ்ட் 2019

Vol. 5 Issue : 18 August 2019






ஆ.சந்திரன்
எஸ்.கலைச்செல்வம்
ஷா. முஹம்மது அஸ்ரின்
ப.ராகசுதா
சி.விஜயன்

ஆ.மணி
ச.கண்ணதாசன்
இரா. இராஜா
வ.கோபாலகிருஷ்ணன்
மூ.அகல்யா

ம.செந்தில்குமார்
எம்.என்.இக்ராம்
சி.சாவித்ரி
சே.முனியசாமி
க.பாலாஜி

Inam ISSN : 2455 - 0531
UAN.TN03D0061112

# இனம்

பன்னாட்டு இணையத் தமிழாய்விதழ்
International E-Journal of Tamil Studies

## பதிப்பாசிரியர்

முனைவர் மு.முனீஸ்மூர்த்தி
தமிழ் உதவிப்பேராசிரியர்
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சி - 17.

முனைவர் த.சத்தியராஜ்
தமிழ் உதவிப்பேராசிரியர்
ஸ்ரீகிருஷ்ணா ஆதித்யா கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 42.

## ஆலோசனைக் குழு

முனைவர் செ.வை.சண்முகம் (சிதம்பரம்)
முனைவர் சு.இராசாராம் (நாகர்கோயில்)
முனைவர் சிலம்பு நா.செல்வராசு (புதுச்சேரி)
முனைவர் ந.வேலுச்சாமி (சேலம்)
திரு சு.ஸ்ரீகந்தராசா (ஆஸ்திரேலியா)

## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணி (புதுச்சேரி)
முனைவர் க.பாலாஜி (கோவை)
முனைவர் இரா.குணசீலன் (கோவை)
முனைவர் ந.இராஜேந்திரன் (கோவை)
முனைவர் இரா.இராஜா (திருச்சி)
முனைவர் ப.சிவமாருதி (தாய்லாந்து)
முனைவர் ச.முத்துச்செல்வம் (மதுரை)
முனைவர் சா.விஜய ராஜேஸ்வரி (தஞ்சாவூர்)
திருமிகு எப்.எச்.அகம்மது சிப்லி (இலங்கை)

இதழாக்கமும் வெளியீடும்
இனம் பதிப்பகம், கோவை
inameditor@gmail.com
www.inamtamil.com
9600370671, 9677821364

ஆகஸ்ட் 2019 மலர் : 5 இதழ் : 18
August 2019 Volume V Issue 18

## உள்ளே ...

**தமிழ்ச் செவ்வியல்**

**பாட்டு - பத்துப்பாட்டு : பெயர்மாற்ற வரலாறு**
The history of the name change pattu to pathuppaattu
முனைவர் ஆ.சந்திரன் | Dr.A.Chandran | 4

**சங்க காலத்தில் நிலவிய சாட்சியச் சட்டவியல்**
Jurisprudence of Evidence existed in Sangam Age
எஸ்.கலைச்செல்வம்/S. Kalaiselvan | 17

**கீழ்க்கணக்கு நூல்களில் ‘இளிவரல்’ மெய்ப்பாடு**
The emotion of disgust in keezhkanakku
ஷா. முஹம்மது அஸ்ரின்/S.Mohamed Azrin | 25

**தொல்காப்பிய வழி அகத்திணை மாந்தர்கள்**
Tolkippian way internal Mankind
ப.ராகசுதா/B.Ragasudha & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 30

**பாணர்களின் உணவுப்பொருளாதாரமும் அரசியல் மரபும்** (Food Economy of Paanar is Political Tradition)
ல.கு.சு.இராஜ்குமார்/L.K.S.Rajkumar & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 35

**பத்துப்பாட்டில் உணவு**
Food in Paththuppattu
சி.விஜயன்/ C.Vijayan & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 42

**பக்தி இலக்கியம்**

**அடியாரைத் தெய்வமாக்கிய மதுரகவியாழ்வாரின் அமுத மொழிகள்**
Aṭiyārait teyvamākkiya maturakaviyāḻvāriṉ amuta moḻikaḷ
முனைவர் ஆ.மணி/Dr.A.Mani | 49

**மீவியற் புனைவுகளுள் ‘கனவு’ பெறும் இடம் (திருவிளையாடற் புராணத்தை முன்வைத்து)**
Dream and the story flow in the supernatural things (Based on the Thiruvilaiyadal Puranam)
முனைவர் ச.கண்ணதாசன்/Dr.S.Kannadasan | 55

## Chief Editors

**Dr.M.Muneesmoorthy**
*Assistant Professor in Tamil*
*Bishop Heber College, Trichy - 17.*

**Dr.T.Sathiyaraj**
*Assistant Professor in Tamil*
*Sri Krishna Adithya College of Arts and Science, Coimbatore - 42.*

## ADVISORY TEAM

*Dr.S.V.Shanmugam (Chidambaram)*
*Dr.S.Rajaram (Nagarkovil)*
*Dr.Silambu.N.Selvarasu (Pondichery)*
*Dr.N.Veluchamy (Salem)*
*Sri S.SriKantharasa (Australia)*

## Editorial Team

*Dr.A.Mani (Pondichery)*
*Dr.G.Balaji (Coimbatore)*
*Dr.R.Gunaseelan (Coimbatore)*
*Dr.N.Rajendran (Coimbatore)*
*Dr.R.Raja (Trichy)*
*Dr.B.Sivamaruthi (Thailand)*
*Dr.S.Muthuselvam (Madurai)*
*Dr.S.Vijaya Rajeshwari (Thanjavur)*
*Thiru.F.H.Ahamed Shibly (Srilanka)*

**சூனிய சம்பாஷணையில் புலப்பாட்டு உத்திகள்**
**Expressional Strategies on Cipher Discourse**
முனைவர் இரா. இராஜா/Dr.R.Raja | 65

**பெரியவாச்சான்பிள்ளை உரையில் வினா அமைப்பு**
**Question Structure of Periyavachan Pillai Commentary**
வ.கோபாலகிருஷ்ணன்/V.Gopalakrishnan | 73

**தற்கால இலக்கியம்**

**தாயுமானவனாகிய இமையத்தின் பெத்தவன்**
**The mother is the epitome of this (Imayam)**
மூ.அகல்யா / M. Ahalya & முனைவர் ம.செந்தில்குமார்/Dr.M.Senthilkumar | 79

**வரலாறு - சமூகவியல் - புவியியல் - கல்வியியல்**

**பன்முக நுண்மதி, மனவெழுச்சி நுண்மதி - பின்னணியும் பிரயோகமும் -**
**Multiculturalism, psychoanalysis (background and application)**
எம்.என்.இக்ராம்/M.N.Ikaram | 84

**ஒப்பிலக்கியம் கற்பித்தல் அணுகுமுறைகள் (திருக்குறள் - வேமன சதகம்)**
**Comparative Teaching Approaches (Thirukkural - Vamana Satakam)**
முனைவர் சி.சாவித்ரி | Dr.Ch.Savithri | 108

**முதுகுளத்தூர் சதாவதானம் சரவணப்பெருமாள் கவிராயர் (பேரர்)**
**Mudukulathur sathavathanam saravanaperumal kavirayar and his erudition**
முனைவர் சே.முனியசாமி / Dr.S.MUNIYASAMY | 122

**சிந்துவெளி - பெருங்கற்காலத் தரவுகளை முன்வைத்துப் பாண்டியரின் தொன்மங்கள்**
**(Pandiyas myth based on the Indus civilization - Megalithic evidences)**
முனைவர் க.பாலாஜி | Dr.G.Balaji | 137

•••

மதிப்பிடப்பெற்றது

# பாணர்களின் உணவுப்பொருளாதாரமும் அரசியல் மரபும்

# Food Economy of Paanar is Political Tradition

ல.கு.சு.இராஜ்குமார்/L.K.S.Rajkumar[6]
முனைவர் ம.செந்தில்குமார்/ Dr.M.Senthilkumar[7]

**Abstract:** What is the basis of the food economy of paanar. Music, singing and singing is a profession of fashion. They do not produce food for themselves. They spend their entire lives playing music. They praise the ruler of the country, sing his talents and sing their gifts and fulfill their food needs. They share their wealth without having to pay for themselves. Trafficking in the poverty of paanar is inherited by the king and the donor of the rich. It is the duty of the king to protect the country and to protect the citizens. It is a political tradition to enrich the lives of the people who seek it and enrich their lives and lives.

Date of submission: 2019-06-20
Date of acceptance: 2019-07-24
Date of Publication: 2019-08-05
Corresponding author's
Name: ல.கு.சு.இராஜ்குமார் & முனைவர் ம.செந்தில்குமார்
Email: malaisenthilptp@gmail.com

**Keywords:** Food, Politics, Economy, Counseling, Attributed to the poverty of the scholars, Poverty level of Paanar, Paanar life, Donor, The king's hospitable legacy, L.K.S.Rajkumar, Dr.M.Senthilkumar, The tradition of greeting the king, பாணர், உணவுப்பொருளாதாரம், இசைத்தலும், பாடல் பாடி, பண், அரசியல், மரபு, ல.கு.சு.இராஜ்குமார், முனைவர் ம.செந்தில்குமார்.

பாணர்களின் உணவு பொருளாதாரம் எதை அடிப்படையாக வைத்து செயல்படுகிறது. இசைத்தலும், பாடல் பாடி, பண் அமைத்தலும் பாணர்களின் தொழிலாகும். தாமாக முயன்று தங்களுக்குத் தேவையான உணவு பொருட்களை உற்பத்தி செய்வதில்லை. முழுநேரத்தையும் இசைக்காகவே செலவழிக்கின்றனர். நாட்டை ஆளும் அரசனை புகழ்ந்து அவனுடை ஆற்றல்களை பாடலாகப் பாடி பரிசுகளை பெற்று தமது உணவுத் தேவையைப் பூர்த்தி செய்து கொள்கின்றனர். கொடையாகப் பெற்ற பெரும் செல்வத்தை தமக்கென முழுவதும் வைத்துக் கொள்ளாமல் தம் சுற்றத்துடன் பகிர்ந்து வாழ்கின்றனர். பாணர்களின் வறுமையைப் போக்குவது அரசர் மற்றும் வள்ளல்களின் கொடை மரபுபாகிறது.

[6] முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632 115. மின்னஞ்சல் : lksrkumar@gmail.com
[7] இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம், சேர்க்காடு, வேலூர் – 632 115. மின்னஞ்சல் : malaisenthilptp@gmail.com

நாட்டை காப்பதும் குடிமக்களை தம் கண்போல் காப்பதும் அரசனின் கடமையாகிறது. இதில் தன்னை நாடிவரும் மக்களின் குறைகளைக் களைந்து அவர்களின் வளத்தையும் வாழ்வையும் செம்மையாக்குவது அரசியல் மரபாகும்.

**உணவு**

மனிதன் உயிர்வாழ மூன்று இன்றியமையாத பொருள்கள் தேவைப்படுகிறது. அவை, 1. உணவு, 2. உடை, 3. உறையுள். இவற்றில் முதன்மையாக விளங்குவது உணவேயாகும். பசி வந்தாள் பத்தும் பறந்து போகும் என்பது பழமொழி. தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவேம் என்றான் பாரதி. எல்லோர்க்கும் எல்லாமும் கிடைக்க வேண்டும் இல்லையேனில் இந்நாடு அழிய வேண்டும் என்றவர் கண்ணதாசன்.

"உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்" (புறம்.18:19-20)

என்ற பாடலடிகள் மூலம் பாண்டியன் நெடுஞ்செழியனுக்குக் குடபுலவியனார் எனும் புலவர் உணவின் இன்றியமையாதத் தன்மையை விளக்குகிறார்.

**அரசியல்**

ஒரு நாட்டினுடைய ஆட்சி முறைகள், அவர்கள் செய்யும் செயல்கள், போடும் சட்டங்கள் அனைத்தும் அரசியல் எனப்படும். எத்தகைய அரசியல் முறை இருந்தாலும் அவை நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பயன்படும் விதத்தில் அமைய வேண்டும்.

"உறுபொருளும் உல்கு பொருளும் தன்ஒன்னார;த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்" (குறள்.756)

அரசனின் தலையாயக் கடமை, தனக்குப் பொருள் வரும் வழிகளை அதிகரிக்கவேண்டும். வந்த பொருள்களை காப்பாற்றவும், அவ்வாறு காப்பாற்றிய பொருள்களை பிறர; கவராத வண்ணம் பாதுகாக்கவும் வல்லவனாக அரசன் திகழவேண்டும். சேகரித்த பொருட்களை அறம், பொருள் வழியே செலவு செய்யவேண்டும். இதனை,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு" (குறள்.385)

என்னும் குறட்பாவில் வள்ளுவர; கூறியுள்ளார;.

**பொருளாதரம்**

"மானுட வாழ்க்கையின் அடிப்படையே பொருள்தான். வாழ்க்கை ஆதாரம் பொருள். ஆதனால்தான் பொருளாதாரம் என்று பெயர் வைத்தார்கள் என்று எல்.கே.அக்னிபுத்ரன் தம்முடைய செம்மொழி இலக்கியமும் சமூகவியல் கோட்பாடும், ப.6, என்னும் நூலில் கூறியுள்ளார்.

ஒரு நாட்டின் உயர்வுக்கும், ஒரு தனிமனிதனின் உயர்வுக்கும் ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தின் உயர்வுக்கும் பொருள் இன்றியமையாததாகத் திகழ்கிறது.

உயிர்கள் மேல் அருள் இல்லாதார்க்கு வீட்டுலகத்து இன்பம் இல்லை. பொருள் இல்லாத்தார்க்கு இவ்வுலக இன்பம் இல்லை,

"அருள்இல்லாருக்கு அவ்வுலகம் இல்லை பொருளில்லார்க்கு
இவ்வுலகம் இல்லாகி யாங்கு" (குறள்.247)

என்பதை வள்ளுவரின் குறள் வழியே அறியலாம்.

**பாணர் – பொருள் விளக்கம்**

பண் என்னும் சொல்லின் அடியாகப் பிறந்து முதல் நீண்டதுதலான் 'பாண்' என்பதாகும். பாண் என்பது பாண்குடி, பாண்சேரி பாண் கடன் எனப் பல சொற்களின் வேர்ச் சொல்லாகும். பாண் என்பது அர் என்னும் பலர் பால் ஈறு பெற்றுப் பாணர் என்றாயிற்று. பண் இசைப்போர் பாணர் எனத் தொழிலாலகு பெயராகவோ பண்பாகு பெறராகவோ அமைந்துள்ளது.

பாணர்களில் ஆடவரைச் சென்னியர், வயிரியர், செயிரியர், மதங்கர், இன்னிசைகாரரர், பாணரென்ப என பிங்கல நிகண்டு பொருள் தருகிறது. பேண்டிரைப் பாடினி, விறலி, பாட்டி, மதங்கி, பாடல் மகடூஉ பாண்மளாகும் எனத் திவாகரமும் கூறுகின்றன.

பாணர் என்னும் சொல் பொதுநிலையில் பண்ணிசைத்துப் பாவோரைக் குறிக்கும். பண் இசைத்துப் பாடுவதால், பண்ணுக்கு ஏற்றப் பாடல்களைப் பாடுவதால் அவர்கள் பாணர்கள் எனப்பட்டார்கள். இவர்கள் பாட்டு அறிந்தவர்கள்இ கற்பனையும், கவித்துவமும் கொண்டவர்களாக விளங்கினர்.

**ஆற்றுப்படுத்துதல்**

வள்ளலை நாடிச் சொன்று வாழ்த்திப் பாடி பொருள் பெற்று வறுமையைப் போக்கிக் கொள்வது பாணர்களின் மரபாகும். ஒரு புரவலனிடம் சென்று பொரும்பொரும் பரிசிலாகப் பொற்றுவந்த பொருநர், பாணர், விறலியர், கூத்தர், புலவர் ஆகியோருள் ஒருவர் பரிசில் பெறாதார் ஒருவர்க்குத் தாம் பெற்ற பெருவளத்தைச் சுட்டிக்காட்டி, அதனை நல்கிய தலைவன்பால் செல்வதற்குரிய வழிகளை எடுத்துரைப்பது ஆற்றுப்படை எனப்படும். இதனை,

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" (தொல்.புறத்.நூ.36)

என்னும் தொல்காப்பிய புறத்திணை நூற்பாவில் ஆற்றுப்படைக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

**புலவர்களின் வறுமைக்கு காரணம்**

1. புலவர்கள் ஓரிடத்தில் நிலையாக வாழ்ந்து உழைத்து பொருள் தேடுவதில் காலம் கழிக்காமல், எண்ணி எண்ணிப் புலமை தேடி வாழ்ந்த வாழ்வு.

2. புலவர்களின் பெருமை உணர;ந்த புரவலர;கள் நல்கிய பெரும் பொருள்களை வைத்துக் காக்கும் வன்நெஞ்சம் இன்றி தம்மிடம் இருக்கும் பொருட்களை பிறருக்கு கொடுத்து வாழ்ந்த எளிமை.

3. இவற்றால் ஏற்பட்ட வறுமையின் காரணமாக புலவர்கள் பழுமரம் தேடும் பறவைபோல வழங்கும் புரவலர;களை நாடிச்சென்றனர;.

4. எனவே பாணர்கள் கலைவாழ்வில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டதாலும், கலையின் வளர்ச்சிக்கு தம்மை அர்பணித்துக் கொண்டதாலும் கலைக்கே முக்கியத்துவம் அளித்தனர். வாழ்வில் பொருள் சேர்த்தலுக்கு பாணர்கள் முக்கியத்துவம் அளிக்கவில்லை என்பது சங்க பாடல் உணர;த்தும் உண்மையாகும்.

**பாணர்களின் வறுமை நிலை**

குப்பையில் கிடக்கும் வேளைக் கீரையை விரும்புவார் பிறர் இன்மையால் அது கிடைத்தது. அவ்வாறு எளிதில் கிடைத்த கீரைக்கு உப்பு இட்டுச் சமைத்தற்கும் இயலாத வறுமை நிலையில் உள்ளனர். உப்பு இல்லாமல் சமைத்த அக்கீரையை பிறர் காணதபடி கததவடைத்து தம் சுற்றத்துடன் உண்டனர். இதனை,

"வளைக்கை கிணைமகள் வள்உகிர்க் குறைத்த
குப்பை வேலை உப்புஇலி வெந்ததை
மடவோர் காட்சி நாணி கடைஅடைத்து" (சிறுபாண். 136-138)

என்னும் சிறுபாணாற்றுப்படையில் வறுமையின் பொருட்டு உண்ணும் உணவின் சிறுமையை ஊரார் காணதவாறு கதவடைத்து உண்ட நிலையை அறியமுடிகிறது.

"ஆடுபசி உழந்தநின் இரும்பேர் ஒழுக்கலொடு
நீடுபசி ஒராஅல் வேண்டின் நீடுஇன்று
எழுமதி வாழி எழின் கிழவ" (பொருநராற்றுப்படை.61 – 63)

கொள்வது போன்ற பசியாலே பாணனும் அவனுடைய சுற்றத்தாரும் பெரிதும்; வாடியிருக்கின்றனர். பாணன் தன் சுற்றத்துடன் நெடுநாட்களாக பசியால் துன்புற்றிருக்கின்றனர். அத்தகைய துன்பத்திலிருந்து நீங்கி வாழ உடனே எழுந்து வா என பாணனை ஆற்றுப்படுத்துவதிலிருந்து நாம் பாணருடைய வறுமையும் பசி துயரையும் அறியமுடிகிறது.

**பாணர் வாழ்வு**

சில பாணர்கள் தாம் துய்ப்பதற்கு மட்டுமின்றிப் பிறருக்குக் கொடுப்பதற்காவும் பொருளை இரந்தனர். இதனை,

"கட்கேள்விக் கவை நாவின்
நிறன் உற்ற அராஅப் போலும்
வறன் ஒரீஇ–வழங்கு வாய்ப்ப
வடுமதி அத்தை கடுமான் தோன்றல்!" (புறம்.352:14–16)

என்ற வரிகளில் நிறம் பொருந்திய பாம்பு தன் தோலை உரித்து நீக்கிளாற் போல வறுமை நீங்கிப் பிறருக்கும் யாம் வழங்கும் வண்ணம். எமக்கு வேண்டுவன தந்து விடை தருக என வேண்டுவதை அறியலாம்.

**கொடை**

பொருள் வேண்டி வருபவர்க்கு அவர்களின் வறுமை போக்க கொடை வழங்கும் முறையினை புறப்பொருள் வெண்பாமாலை,

"ஈண்டிய நிரை ஒழிவின்றி
வேண்டி யோர்க்கு விரும்பி வீசின்று"
"அங்கட் கிணையன் துடியன் விறலிபாண்
வேங்கட்கு வழசஉர் விலையாகும் – செங்கட்
செருச்சிலையா மன்னர் செருமுனையிற் சீறி
வரிச்சிலையால் தந்த வளம்" (புற.வெ.16)

இவ்வாறு குறிப்பிடுகிறது. மேலும், பொருள் உள்ளவரையே உலகம் மதிக்கும், பொருள் இல்லாதவரை இவ்வுலகம் எள்ளும்,

"பொருளல்ல வரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்" (குறள்.751)

யாரிடத்தில் அதிகமாகப் பொருள் இருக்கிறதோ அவர்களுக்கே இவ்வுலகத்தில் மதிப்பு உயர்கிறது.

**அரசனின் விருந்தோம்பும் மரபு**

கரிகாற் பெருவளத்தான் தன்னை நாடி வரும் இரவலர்க்கு வேண்டியவற்றை தந்து காத்து ஓம்பினான்;. இரவலரின் வறுமை நிலையினைப் பிறர் அறியக் காரணமாகவும், செல்வம் உடையவரிடம் இருந்து தன்னைப் பெரிதும் வேறுபடுத்திக் காட்டுவனவும் கந்தலாடைகளே ஆதலின், அவற்றைப் போக்கிச் சிறந்த ஆடைகளை உடுக்கச் செய்தவழி, இரவலன் தன் கேளிரொடு கேளிராய் நாணமின்றிப் பழக ஏதுவாகலான் இரவலனின் ஏழ்மை உணர்ச்சியை மாற்றப் பண்புடைய வள்ளல்கள் இம்முறையை பின்பற்றினர். இச்செய்திகளை,

"நோக்கு நுழைகல்லா நுண்மைய பூக்கிந்து
அரவுஉரி அன்ன அறுவை நல்கி
மழைஎன மருளும் மகிழ்செய் மாடத்து
இழைஅணி வனப்பின் இன்நகை மகளிர்
போக்குஇல் பொலங்கலம் நிறைய பல்கால்
வாக்குபு தரத்தர வருத்தம் வீட

ஆர உண்டு பேரஞர் போக்கி
செருக்கொடு நின்ற காலை" (பொருநராற்றுப்படை. 82-89)

மேலும், ஒருவனுடைய வறுமை நிலையினை பிறர் அறிய வெளிப்படுத்துவது அவன் உடுத்திய கந்தல் ஆடையேயாம். எனவே மான உணர;ச்சி மிக்க பரிசிலன் மனத்தை மகிழ்விக்க, முதலில் அவனது ஆடையை அகற்றி, அவனுக்குச் செல்லச் சிறப்புடைய ஆடை அணிவித்தலையே வள்ளல்கள் தம் முதற் கடமையாகக் கொண்டனர். இதனை,

"நீசில மொழியா அளவை மாசில்
காம்பு சொலித்தன்ன அறுவை உடீஇ" (சிறுபாண்.235-236)

என்னும் பாடல் வரிகளில் காணமுடிகிறது. மேலும்,

"அந்நிலை அணுகல் வேண்டி நின்னரைப்
பாசி யன்ன சிதர்வை நீக்கி
அவியன்ன அவிர்நூற் கலிங்கம்
இரும்போர் ஒக்கலொடு ஒருங்குடன் உடீஇ" (பெரும்பாண்.467-470)

புலவர்க்கு வழங்கும் நன்னனது கொடைச் சிறப்பு கார்மேங்கள் மழை சொரிந்தாற் போல, ஆடை, உணவு, அணிகலன்கள், தேர், யானை, குதிரை, பசு, பொருட்குவை ஆகியவற்றைக் கூத்தர்க்கும், விறலியர்க்கும், புலவர்க்கும் அவர் தம் சுற்றத்தார்க்கும் வழங்குவான். இதனை,

"உவந்த உள்ளமொடு அமர்ந்தினிது நோக்கி
இழைமருங் கறியா நுழைநூற் கலிங்கம்
எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ
முடுவல் தந்த பைந்திணைத் தடியொடு
நெடு வெண்ணெல்லின் அரிசி முட்டாது"(மலைபடு.560-564)

என்னும் மலைபடுகடாம் பாடலில் நன்னனது கொடை தன்மையை அறியலாம்.

பாணர்களின் கொடும் பசி வறுமைத் தீர மதம் பொழிகின்ற கதுப்பினை உடைய, கொலைத்தொழில் புரியும் சிறுகண் யானையோடு, பெரிய தேரினையும் பரிசாக வழங்கினான் நல்லியக்கோடன் என்னும் செய்தியை,

"அழிபசி வருத்தம் வீட பொழிகவுள்
தறுகண் பூட்கை தயங்கமணி மருங்கின்
சிறுகண் யானையொடு பெருந்தேர் எய்தி
யாம் அவன் நின்றும் வருதும்" (சிறுபாண். 140-143)

இப்பாடல் வரிகள் வாயிலாக அறியமுடிகிறது.

### அரசரை வாழ்த்தி பாடும் மரபு

முழவு, பெருவங்கியம், யாழ் என்னும் இசைக்கருவிகளின் ஒலியோடு இயைந்து விறலியர; பாடுவர். அவர்கள் அரசனை வாழ்த்திப் போற்றும் மரபு

அறிந்தவர். அவர்கள் முதலில் கடவுளை வாழ்த்திப் பாடிப் பின்னர் அரசனைப் போற்றுவர். புதியதாகப் பாடப்டும் பாடல்களைப் பாடி, வாழ்த்தும் மரபு பின்வரும் பாடலில்,

"மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக்
கடவ தறிந்த வின்குரல் விறலியர்
தொன்றொழுகு மரபிற் றம்மியல்பு வழாஅ
தருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை
விருந்திற் பாணி கழிப்பி நீண்மொழிக்
குன்றா நல்லிசைச் சென்றோ ரும்ப" (மலைபடு.534-540)

இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

## தொகுப்புரை

சங்க காலத்தில் நாட்டையும் மக்களையும் காக்க ஒரு தலைமைப் பண்பு கொண்ட அரசன் தேவைப்பட்டான். வீரமும் கொடைத்தனமையும் தன்னுடைய இரண்டு கண்களாக போற்றும் பண்புடையவனே அரசனாவான். மக்கள் ஈட்டும் வருவாயில் ஒரு பகுதியை அரசனுக்கு வரியாக செலுத்தினர். அதைக் கொண்டு கொடைகள் பல வழங்கினான். யாழ், இசை, பண் கொண்டு பாடி, ஆடி அரசனை மகிழ்விக்கும் தொழிலை மேற்கொண்ட பாணர், விறலியர், கூத்தர், போன்றோர் தங்களுக்கான வேறு எந்த தொழிலையும் மேற்கொண்டதில்லை. இடம்விட்டு இடம் பெயர்ந்துக் கொண்டே இருந்தனர். ஆரசர் வள்ளல்களை வாழ்த்தி பாடி பரிசுகளைப் பெற்று அதைக்கொண்டு உணவுப்பொருள் ஆதார தேவையை பூர்த்தி செய்தனர். பாணர்களின் வறுமையை களைந்து வளமையை சேர்ப்பது அரசனின் கடமையயாகிறது.

## பார்வை நூல்கள்


- இளம்பூரணர் (உ. ஆ.), (1969), தொல்காப்பியம் பொருளதிகாரம், சென்னை: கழக வெளியீடு.
- சுப்பிரமணியன் ச.வே. (உரை), (2004), பத்துப்பாட்டு, கோவிலூர்: கோவிலூர் மடாலயம்.
- நாகராசன் வி, (உரை), (2017), பத்துப்பாட்டு மூலமும் உரையும், சென்னை: நீயூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
- பரிமேலழகர் (உரை). (2010), திருக்குறள், சென்னை: பூம்புகார் பதிப்பகம்.
- புலியூர்க்கேசிகன் (உரை), (2015), புறப்பொருள் வெண்பாமாலை மூலமும் உரையும், சென்னை: சாரதா பதிப்பகம்.